
பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 20 சனிக்கிழமை 04.01.2025 | அதிர்வு 156

## வவுனியா இளைஞர் கனடாவில் நேற்று பரிதாப உயிரிழப்பு



(கி.வசந்தன்)

கார் கதவு திறக்கப்படா மையால் அதிக நேரம் மூச்சுத் திணறல்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## கைதியின் மரணச்சடங்குக்குச் சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்; இளைஞர் ஒருவர் மரணம்

### மேலும் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



வெலிகம – தப்பரதோட்ட – வள்ளிவெல வீதியில் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர்

02 ▶

# எலிக்காய்ச்சலால் யாழில் மேலும் 2 பேர் உயிரிழப்பு



### 10 பேர் சிகிச்சை நிலையங்களில்



(எஸ்.நிதர்ஷன்)

**எலிக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலும் இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

02 ▶

## வடக்கு ஆளுநர் – இந்தியத் துணைத்தூதுவர் சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், இந்தியத் துணைத் தூதுவர் சிறி சாய் முரளிக்கும் இடையிலான சந்திப்பு இன்று சனிக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இந்தியத் துணைத் தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷும் பங்கேற்றிருந்தார்.

ஆளுநர் மற்றும் துணைத்தூதுவர் இருவரும் பரஸ்பரம் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். இந்திய அரசால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கு வடக்கு மக்கள் சார்பில் ஆளுநர்

02 ▶

# சீனாவில் பரவும் வைரஸ் ஒரு தொற்று நோய் அல்ல

## அது புதிய வைரஸும் அல்ல என்று பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவிப்பு

"சீனாவில் பரவி வரும் எச்.எம்.பி.வி. எனப்படும் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் ஒரு தொற்று நோய் அல்ல. அதேவேளை, புதிய வைரஸும் அல்ல. 2001ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் குளிர்காலத்தில் சுவாச நோய்களை ஏற்படுத்துவதாகும்."

– இவ்வாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரணு உயிரியல் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-



"குளிர்காலத்தில் இவ்வாறான சுவாச நோய்கள் ஏற்படுவது வழமையானதாகும். ஆனால், இது பொது சுகாதார அவசர நிலைமைக்குக் காரணமாக அமையாது. அந்தவகையில் தற்போது சீனாவில் சுவாச நோய்த்தொற்றுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் அறிகுறிகளில் இருமல், சளி அல்லது மூக்கில் அடைப்பு, காய்ச்சல் மற்றும் தொண்டை புண் ஆகியவை அடங்கும்.

கடுமையான சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் அல்லது மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நிமோனியாவாக அதிகரிக்கும்.

2001 இல் கண்டுபிடிக்கப்பட்ட இது ஒரு புதிய வைரஸ் அல்ல. இது பொதுவாக சளி அல்லது காய்ச்சலைப் போன்ற அறிகுறிகளுடன் சுவாச நோய்த் தொற்றுகளை ஏற்படுத்துகின்றது.

சில சமூக ஊடகப் பதிவுகள் நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. ஆனால், சீனா அல்லது உலக சுகாதார ஸ்தாபனம் பொது சுகாதார அவசரகால நிலைமையை அறிவிக்கவில்லை." – என்றுள்ளது.

# யாழில் வன்முறைக் கும்பலின் ஆண்டு நிறைவுக்கு கேக் வெட்டிக் கொண்டாட்டம்; இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வன்முறைக் கும்பல் ஒன்றின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி கேக் வெட்டிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட காணொளியை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நவாலி பகுதியை சேர்ந்த 22 வயதான இளைஞரே மானிப்பாய் பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வவுனியா இளைஞர்...**

ஏற்பட்டு பரிதாபகரமாகத் தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த மேற்படி இளைஞர் கனடாவில் வாழ்ந்து வருகின்றார். நேற்று வெள்ளிக்கிழமை தேவை நிமிர்த்தம் வெளியில் சென்ற நிலையில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது .

வவுனியா, வீரபுரத்தைச் சேர்ந்த ஜேக்கப் நெவில் டிலக்சன் (வயது 20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

**கைதியின்...**

உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் வலான மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் 26 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளதுடன் 29 வயதுடைய இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இருவரும் கப்பரதொட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மாத்தறை சிறைச்சாலையில் மரக்கிளை முறிந்து வீழ்ந்ததில் உயிரிழந்த கைதியின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு வீடு திரும்பியவர்கள் மீதே இன்று அதிகாலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 3 பேர் உயிர் தப்பியதுடன் துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**எலிக்காய்ச்சலால்...**

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும், மற்றையவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் எலிக்காய்ச்சலுக்காக 10 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**வடக்கு ஆளுநர்...**

நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

புதிய ஆண்டில் இந்திய அரசிடமிருந்து எவ்வாறான உதவிகள் தேவை என்பது தொடர்பில் துணைத்தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்துகொண்டார்.







# கடல் மார்க்கமாக 11 கிலோ தங்கத்தை கடத்திய மூவர் வசமாகச் சிக்கினார்கள்



**(ந.லோகதயாளன்)**

கற்பிட்டி, பத்தலன்கடுவ தீவுக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில் 11 கிலோ 300 கிராம் தங்கத்தைக் கடத்திச் சென்ற மூன்று சந்தேகநபர்கள் இன்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பத்தலங்குண்டுவ பகுதிக்கு அண்மையில் உள்ள கடற்பரப்பில் வைத்து இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள் மூவரும் கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் மூவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வவுனியாவில் நாளை கூடுகின்றது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி



ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் முதல் தடவையாகக் கூடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைமைக் குழுவானது தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

அத்துடன் அடுத்தகட்டமாக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது என்பது குறித்தும் விரிவாகக் கலைந்துரையாடவுள்ளதோடு உள்ளூராட்சி சபைத் தேர்தலை முகங்கொடுப்பதற்கான வியூகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவுள்ளது.

கூட்டணிக்குள் இளந்தலைமுறையினரை உள்வாங்குதல் மற்றும் சிரேஷ்ட தலைவர்களின் எதிர்கால அரசியல் பயணம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் உரையாடப்படவுள்ளன என்று தெரியவந்துள்ளது.



# மக்களை அலைக்கழிக்காமல் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள்!

## மன்னாரில் வடக்கு ஆளுநர் வேதநாயகன் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், வாஸ் கூஞ்ஞ)**

புத்தாண்டு அன்று எடுத்துக் கொண்ட உறுதி மொழிக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் அரச பணியாளர்கள் செயற்பட வேண்டும். மக்களை அலைக்கழிக்காமல் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள்.

இவ்வாறு என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை (02) காணிப் பிரச்சினை தொடர்பான நடமாடும் சேவை இடம்பெற்றது.

நடமாடும் சேவைக்கு முன்னதான மன்னார் மாவட்டம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் தொடர்பில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

புலவு காணிகளில் அமைக்கப்பட்டுள்ள அரச கட்டடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

புலப்படுகையில் அமைக்கப்பட்ட அரச கட்டடங்களுக்கு அனுமதி வழங்க முடியாது எனக் குறிப்பிடப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் அந்தக் கட்டடங்களை வேறிடங்களில் அமைப்பதற்கான ஒழுங்குகள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் பெரும் சவால்களை எதிர்கொள்வதாக மன்னார் மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

குறிப்பாக வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன மக்கள், அரச திணைக்களங்கள் பயன்படுத்திய பல காணிகளை தமக்கு



உரியன என வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் இந்தப் பிரச்சினை பொதுவாக உள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ள விவரங்களை அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்திய ஆளுநர், அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது. காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் தவிசாளரை அழைத்து இந்தப் பிரச்சினைகள் தீர்க்கலாம் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்தில் லட்சக் கணக்கான கால்நடைகள் காணப்படும் நிலையில் அவற்றுக்கு உரிய மேய்ச்சல் தரவைகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டது.

குத்தகை அடிப்படையில் காணி வழங்கல்களில் உள்ள தாமதத்தை தவிர்ப்பதற்கு மேலதிக ஆளணிகளை தற்காலிகமாக வழங்கி அதனை முடிக்குமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளுமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

அதன் பின்னர் மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்களால் முன்வைக்கப்பட்ட காணிப் பிரச்சினைகள் தனித் தனியாக ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் ம.ஸ்ரீஸ்கந்தகுமார், வடக்கு மாகாண காணி ஆணையாளர் அ.சோதிநாதன், மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப், மடுப் பிரதேச செயலர் கே.பீட் நிஜாகரன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சி.அரவிந்தன், நானாட்டான் பிரதேச செயலாளர் திருமதி கே. சிவசம்பு, முசலி பிரதேச செயலாளர் எஸ்.ரஜீவ், நில அளவை, வனவளத் திணைக்களத்தினர், வன உயிரிகள் திணைக்களத்தினர் ஆகியோர் பங்கேற்றனர்.



### சூரியமின்சக்தி உற்பத்தி நிறுவனத்துக்கு காணி வழங்கல்

# திருமலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

திருகோணமலை முத்துநகர் பிரிவிலுள்ள உப்புவெளி கமநல அபிவிருத்தி பிரிவில் உள்ள சுமார் 1600 ஏக்கர் வயற்காணி திடீரென சோலர் பவர் சூரியமின்சக்தி உற்பத்தி நிறுவனத்துக்குக் கையளிக்கப்பட்டு இருப்பதையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் நேற்று (03)வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது காணிகளை விடுவிக்க வேண்டும் எனக் கோரி பல வித பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இங்கு சுமார் ஆயிரத்து 200 விவசாயிகள் காலா காலமாகக் குறித்த 1600 ஏக்கர் விவசாய நிலங்களில் செய்கை செய்து வருகின்றார்கள். இதற்குள் 5 நீர்ப்பாசன குளங்களும் அடங்குகின்றன.

கடந்த வருடம் துறைமுக அதிகார சபையினர் சில பகுதிகளை தங்கள் பிரதேசம் என்று அடையாளம் படுத்தினர். அதேவேளை தனியார் காணிகளும் இங்குள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென்று துறைமுக அதிகார சபை அந்த நிலங்களை சோலர் பவர் சூரிய சக்தி மின் உற்பத்தி நிறுவனத்துக்கு விடுவிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தல் கிடைத்திருக்கின்றது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.





# ரஷ்யக் கூட்டமைப்பின் தூதுவருக்கும் கிழக்கு ஆளுநருக்குமிடையில் சந்திப்பு!

(அபு அலா, கோபாலபுரம் எஸ். எம்.முபீன், ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ரஷ்யக் கூட்டமைப்பின் தூதுவர் லெவான் எஸ்.டிலாஹர்யன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (03) திருகோணமலையில் உள்ள ஆளுநரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கு மனிதாபிமான உதவியின் கீழ் ரஷ்ய கூட்டமைப்பிடம் இருந்து பெறப்பட்ட உரத்துக்குத் தாம் மிகவும் நன்றிக் கடன்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.



எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்துடனும் இலங்கையுடனும் மிக நெருக்கமாகச் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவார் என்று ரஷ்யத் தூதுவர் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வரி வருமான அதிகரிப்பு

மீண்டெழ முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கி, அதல பாதாளத்தில் விழுந்து கிடந்த நாடு, இப்போது ஓரளவுக்கு மூச்சு விடும் நிலைக்கு மேல் எழுந்திருக்கிறது.

வெளிநாட்டுக் கடனிறுக்க முடியாத நிலையில் தடுமாறிய நாட்டை ஓரளவு மூச்சு விடும் நிலைக்கு கொண்டு வந்த பெருமை - திறமை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசினுடையது என்பது மறுக்க முடியாத உண்மை.

பொருளாதார நெருக்கடி நாட்டின் கழுத்தை இறுக்கிப்பிடித்த சமயத்தில், அந்த நெருக்குவாரத்திலிருந்து நாடு மீண்டெழுந்து, அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் தட்டுப்பாடின்றி - பற்றாக்குறையின்றி - வழமை நிலைக்குத் திரும்புவதற்கு நாட்டின் வருமானமும், அந்நிய செலாவணிக் கையிருப்பும் உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்தார் அப்போது ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் வருமானத்தை உயர்த்துவதற்கான முதல் - அவசர - வழி நாட்டின் வரிகளை உயர்த்தி, அறவீடுகளை மேம்படுத்துவதுதான். உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பது, வெளிநாட்டு ஏற்றுமதிகளை உயர்த்துவது, சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிப்பது போன்றவை அடுத்த கட்ட நகர்வுகள்.

முதல் கட்ட நகர்வாக உடனடியாக வரி உயர்த்துவதில் இறுக்கமான சில நடவடிக்கைகளை ரணில் அரசு எடுத்தது. தவிர்க்கவே முடியாத கட்டாயத்தில் எடுக்கப்பட்ட அந்த நடவடிக்கைகளுக்காக அவரின் அரசு கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டது என்பதும் மறக்கக் கூடியதல்ல.

கடந்த ஆண்டில் நாட்டின் வரி வருமானம் 25 வீதம் வரையில் அதிகரித்திருப்பதான புள்ளி விவரங்கள் இப்போது வெளியாகியுள்ளன.

இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் 1,958.08 பில்லியன் ரூபாவைச் சேகரித்துள்ளது. இது 2023ஆம் ஆண்டில் ரூ.1,565 பொல்லியனிலிருந்துடன், 25.1 சதவீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. வருமான வரி மற்றும் பெறுமதி சேர்ப்பு வரி மூலம் அதிக வருமானம் கிடைத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் செபாலி சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இறைவரித் திணைக்களம் 1,023.2 பில்லியன் ரூபாவை வருமான வரியாக கடந்த ஆண்டு வசூலித்துள்ளது. இது 2023 இல் ரூ.911.097 பில்லியனாக இருந்தது.

2023இல் 469.1 பில்லியன் ரூபாவிலிருந்து பெறுமதி சேர் வரி வருமானம் 2024இல் 714.68 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

பந்தயம் மற்றும் சூதாட்ட வரி வசூல் 7,422 மில்லியன் ரூபாயில் இருந்து 2024 இல் 14,923 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது இரட்டிப்பு அதிகரிப்பாகும்.

2023 இல் 2,478 பில்லியனாக இருந்த பங்குச் சந்தை பரிவர்த்தனை வரி 3,128 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

2024 இல் 1,500 பில்லியன் ரூபாவை வசூலித்ததாக இலங்கையின் சுங்கம் கூறியுள்ளது.

இந்த வரி அதிகரிப்புகள் மக்களை வருத்தும் நடவடிக்கைகள் என்றாலும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கத் தவிர்க்க முடியாதவையாக இருந்தன. ரணில் அரசு அதனை முன்னெடுத்தபோது எதிர்க்கட்சியில் இருந்தபடி அதனைக் கடுமையாக விமர்சித்த தேசிய மக்கள் சக்தி இப்போது அந்த வரி வருமான அதிகரிப்பின் பயனை தனது அரசாட்சியில் தொடர்ந்து பெற்றுக் கொள்கின்றது என்பது உண்மை. அதுவும் வரி விலக்கு அல்லது தவிர்ப்பின் மூலம் இறுக்கத்தைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்காமல்.



# பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான வசந்த பியதிஸ்ஸ எம்.பி. சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு புது வருட தினத்தன்று திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், வைத்தியசாலையின் அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் இணைந்து சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் மிக நீண்ட காலமாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாமல் காணப்படும் கட்டடத்தை மக்கள் பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையையும், வைத்தியசாலையின் அபிவிருத்திக் கான நடவடிக்கையையும் அமைச்சின் ஊடாகப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் சம்மாந்துறை வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர்களுடன் சென்று வைத்தியசாலையின் சுற்றுச் சூழல் நிலைமைகளையும் பார்வையிட்டார்.







# உலர் உணர்வு நிவாரணப் பொதிகள் தம்பலகாமத்தில் மக்களுக்கு வழங்கல்

(எச். எம். ஹலால்தீன்)

தம்பலகாமத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சமூக சேவையாளர் ஏ. எச். மாகினான் முள்ளிப்பொத்தானை ஹமீதியா நகர் மக்களுக்கு இந்த நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார்.

வறுமைக் கோட்டில் வாழும் சுமார் 75 குடும்பங்களுக்கு இவ்வாறு நிவாரணப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.






# பாதிக்கப்பட்ட 'பிரிஜ் மார்க்கெட்' வியாபாரிகளுக்கு உதவிகள்

(பழுவூரான்)

மட்டக்களப்பு – கல்லடி பிரிஜ் மார்க்கெட்டில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த முயற்சியாளர்களது மேசைகள் மற்றும் வியாபாரத்துக்காகக் களஞ்சியப்படுத்தியிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான விற்பனைப் பொருள்கள் நாசகாரக் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.

நாளாந்தம் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் இவ்வாறான சுய தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்பட்ட விபரீத நிலையைக் கருத்தில் கொண்ட சமாரிற்றன் பேஸ் நிறுவனம் இவர்களுக்கு தேவையான இரண்டு மேசைகள் மற்றும் பாதிக்கப்பட்ட 13 வியாபாரிகளுக்கும் புதுவருட பிறப்பை முன்னிட்டு தலா 6000 ரூபா வீதம் நிதி என்பவற்றை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சுய தொழில் முயற்சியாளர்களுக்கான உதவிகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் சமாரிற்றன் பேஸ் அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி எஸ்.ரமணதாஸ் மற்றும் அவரது பாரியார் திருமதி.ரமணதாஸ், மட்டு. சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் உ.உதயகாந்த், மட்டு. சுய தொழில் முயற்சியாளர்கள் சம்மேளனத்தின் ஆலோசகர் ஞானப்பிரகாசம் பிரியவரதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினர்.



குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# முகாமைத்துவ உத்தியோகத்தருக்கு சான்றிதழ்கள் வழங்கிவைப்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள் மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனால் வழங்கி வைக்கப்பட்டன.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் என்பன இணைந்து அரச முகாமைத்துவ சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர்களுக்கான 10 நாள்களைக் கொண்ட வினைத்திறன் தடைதாண்டல் பாட நெறிப் பயிற்சி வகுப்பை நடத்தின.

இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்களே வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.





# மயிலம்பாவெளி உதவும் கரங்கள் சிறுவர் இல்லத்தில் புத்தாண்டு விழா!

(பழுவூரான்)

"வழிதேடும் சிறுவர்களின் ஒளியாக மிளிர்வோம்" எனும் தொனிப்பொருளில் ஆங்கிலப் புதுவருட விழா - 2025 மட்டக்களப்பு மயிலம்பாவெளி உதவும்கரங்கள் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

உதவும் கரங்கள் சிறுவர் இல்லத் தலைவர் ச.ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் இ.முரளீஸ்வரன் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி உப பீடாதிபதி திருமதி த.சுந்தரராஜன் சிறப்பு அதிதியாகவும், மட்டக்களப்பு மதுரா நகை மாளிகை உரிமையாளர் க.தியாகராஜா, மட்டக்களப்பு கிரி கொமினிக்கேசன் உரிமையாளர் த.கிரி கிதரராஜா மற்றும் நடராஜர் சைவசித் தாந்தப் பயிற்சி மைய ஓய்வுநிலை அதிபர் சைவப்புலவர் வே.மகேசரெத் தினம் ஆகியோர் கௌரவ அதிதிகளாக வும், செங்கதிர் சஞ்சிகை ஆசிரியர் செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் மற்றும் மகுடம் சஞ்சிகை ஆசிரியர் மகுடம் வி.மைக்கல் கொலின் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.



EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA





# மலையக மக்கள் முன்னணி விரைவில் மறுசீரமைக்கப்படும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

மலையக மக்கள் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளன என்று மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனின் 15 ஆவது சிரார்த்த தினம், புதுவருட தினத்தன்று ஹட்டனில் மலையக மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னணியின் பிரதி தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். ராஜாராம், முன்னணியின் செயலாளர் நாயகம் எஸ்.விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் பொது செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், நிதி செயலாளர் தாளமுத்து சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மேடையில் வைக்கப்பட்டிருந்த அமரர்.பெ.சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு முதல் மலர் மாலையை முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வே.இராதாகிருஷ்ணன் அணிவித்தார்.

இதனையடுத்து அதிதிகள் நினைவுச்சுடர் ஏற்றியதுடன், அங்கு கலந்துகொண்ட பொது மக்களும் நினைவுச் சுடர்களை ஏற்றினர்.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்கள் முன்னணி தனித்துவமான கட்சியாகும். அக்கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும் என மக்கள் தரப்பினரிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய விசேட குழு ஒன்றை அமைத்திருந்தோம்.

அந்தக் குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைக்களுக்கமைய எதிர்வரும் பொங்கலுக்கு பின்னர் மறுசீரமைப்பு பணி இடம்பெறும்.

அத்துடன், உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பிலும் அவதானம் செலுத்தியுள்ளோம். அந்தத் தேர்தலை மலையக மக்கள் முன்னணி தனித்து எதிர்கொள்ள வேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கைகள் குறித்தும் பரிசீலித்து வருகின்றோம். நாடாளுமன்றத் தேர்தலில் சில மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டது. நவரெலியா மாவட்டத்தில் சிந்தித்து வாக்களித்திருந்தால் இன்னும் இரு தமிழ் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கலாம். எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய வகையில் தமிழ் மக்கள் கையாள வேண்டும்.- என்றார்.

# பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு "நாட்டா லீடர்" சின்னம் சூட்டல் நிகழ்வு!

**(த.சுபேசன்)**



புகையிலை மற்றும் மதுசாரத்தால் பொது மக்களுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்புகளை குறைக்கும் முகமாக செயற்படும் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கான "நாட்டா லீடர்" சின்னம் சூட்டும் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா பவுண்டேசன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

2006 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுபானம் மீதான அதிகார சபைச் சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள அரச நிறுவனத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடளாவிய ரீதியில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தோறும் புகையிலை மற்றும் மதுபானங்களால் ஏற்படும் சுகாதார பிரச்சினைகளைக் குறைப்பதற்காக அவற்றின் கிடைப்பனவை குறைத்தல், சிறுவர்களுக்கு இவை சென்றடையாது தடுத்தல் மற்றும் புகைப் பொருள் மற்றும் மதுபானமற்ற வலயங்களை உருவாக்குதல் உட்பட சட்ட நடவடிக்கைகளில் முன்நின்று உழைத்துவரும் தெரிவு செய்யப்பட்ட பொது சுகாதார பரிசோதகர்களுக்கே இவ்வாறு சின்னம் சூட்டப்பட்டது.

இதில் 300 இற்கு மேற்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நாடளாவிய ரீதியில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சாவகச்சேரியில் வெள்ளம் ஓட வெட்டிய வாய்க்கால் மண்ணை அகழ்ந்த விசமிகள்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட கச்சாய் வீதி ஊரெல்லைத் தெருவில் வருடப்பிறப்பு தினத்தன்று அதிகாலை வேளையில் இனந்தெரியாத குழுவால் பெருமளவான மணல் அகழ்ந்து செல்லப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தைக் கடத்துவதற்காக அரச திணைக்களங்களால் வெட்டப்பட்ட வாய்க்கால் மணலே இவ்வாறு அகழ்ந்து செல்லப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள இராணுவ முகாம் மற்றும் அதனை அண்மித்துள்ள குடிமனைகளில் தேங்கி நின்ற வெள்ளத்தை கடத்துவதற்காக சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நகர சபையின் வீதியில் கடற்கரை வரை சுமார் 800 மீற்றர் தூரம் ஜே.சி.பி. வாகன உதவியுடன் வாய்க்கால் வெட்டியிருந்தனர்.

இருப்பினும் தற்போது வெள்ள அனர்த்தம் கடந்து விட்ட போதிலும் வாய்க்கால் நிரவப்படாமையால் உள்ளதால் இரவு வேளைகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது. மக்கள் போக்குவரத்துச் செய்யவும் சிரமப்படுகின்றனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மக்கள், உரிய தரப்பினர் வாய்க்காலை மூட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# தம்பலகாமம் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (03) பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வெளி விவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதியமைச்சரும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் இடம்பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியில் உள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள், குறைபாடுகள், மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. குறிப்பாக மனித - யானை மோதல், வீதி அபிவிருத்தி , இயற்கை அனர்த்தத்தின் போதான வடிகான் நிலவரம், சட்ட விரோத மண் அகழ்வு, விவசாயிகளுக்கான பசளை, கல்வி, சுகாதாரம் என பல முக்கிய தீர்மானங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

புதிய அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றதன் பின்னர் நடந்த முதலாவது கூட்டம் இதுவாகும்.

இதன்போது, ஊழலை ஒழிக்க வேண்டும். இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் முன்னுரிமை அடிப்படையில் இருப்பது மட்டுமன்றி அரசியலை இலக்காக கொண்டு இடம்பெறக் கூடாது என்று பிரதியமைச்சர் தெரிவித்தார்.

கூட்டத்தில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவிப் பிரதி செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட திணைக்களப் பொறுப்பதிகாரிகள் துறைசார் அரச உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், சண்முகம் குகதாசன் ஆகியோரின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து கலந்துரையாடிய வேலையற்ற பட்டதாரிகள்

(ஹஸ்பர் ஏ.எச்., அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (03) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது.

2024ஆம் ஆண்டு ஆசிரியர் சேவைக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம், கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், 2025 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடினர்.



இங்கு உரையாற்றிய ஆளுநர், 2024ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் ஆட்சேர்ப்பு இறுதிக் கட்டத்தில் உள்ளது. இந்த மாதத்தின் பிற்பகுதியில் பணி நியமனம் வழங்கப்படும். 2025 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் நியமனத்துக்கான அடிப்படைப் பணிகள் மேற்கொள்ளப்படும் . இது ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளைப் பரிசீலித்து நியாயமான முறையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ஆட்சேர்ப்பு செயல்முறை மிகவும் சிக்கலானது. ஆட்சேர்ப்புக்கு தேவையான நடவடிக்கைகள் கூடிய விரைவில் செய்யப்படும்.- என்றார்.






# கல்முனை றோட்டரிக் கழகத்தால் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 40 கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை றோட்டரிக் கழக தலைவர் றோட்டேரியன் என். ரதீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒவ்வொன்றும் 2000 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர் பி. மோகனகாந்தன், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சிரேஷ்ட தாதியர் திருமதி எஸ். சிவமலர் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கேற்றனர்.

கழகத்தின் செயலாளர் றோட்டேரியன் எம். சிவபாதசுந்தரமும் நிகழ்வில் கலந்துகொண்டார்.





# காரைதீவில் திருவெம்பாவை ஊர்வலம் இன்று ஆரம்பம்!

(வி.ரி. சகாதேவராஜா)

வருடாவருடம் இடம்பெற்று வரும் இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை ஊர்வலமானது இந்த முறையும் சிறப்பான முறையில் இன்று (04) சனிக்கிழமை அதிகாலை இந்துக்கள் வாழும் பிரதேசங்களில் ஆரம்பமாகியது.

சிவனை நினைந்து வழிபடும் இவ் விரதம் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கம் வருடா வருடம் நடத்திவரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமானது இன்று சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து நாள்கள் அதிகாலை ஊர்வலம் மற்றும் ஆலய சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

13 ஆம் திகதி திங்கட்கிழமை திருவாதிரையில் ஆருத்ரா தரிசனத்துடன் இவ்விரதம் நிறைவடையும்.

# வன இலாகாவின் ஆக்கிரமிப்பால் வன்னி மக்கள் நிர்க்கதி நிலையில்!

## எதிர்ப்பு வெளியிட்டார் ரவிகரன் எம்.பி.



(விஜயரத்தினம் சரவணன்)

வன்னியில் வனவளத் திணைக்களத்தின் அத்து மீறிய அபகரிப்புக் காரணமாக தமிழ் மக்கள் தமது பூர்வீக குடியிருப்புக் காணிகளையும், பூர்வீக விவசாய வாழ்வாதாரக் காணிகளையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார்.

வன இலாவின் இந்தச் செயற்பாட்டுக்குத் தனது கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டார்.

மன்னார் - மடு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று (03) இடம்பெற்றது.

கூட்டத்தில் மடு பிரதேச செயலர் பகுதிக்கு உட்பட்ட சோதிநகர், இரணை இலுப்பைக்குளம், மழுவராயர் கட்டையடம்பன், கரையார் கட்டனகுளம் உள்ளிட்ட பகுதிகளில் வனவளத் திணைக்களம் மக்களுக்கு உரிய பெருமளவான காணிகளை அபகரித்துள்ளது என்று கிராமமட்ட பொது அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தனது கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வனவளத் திணைக்களத்தின் அபகரிப்பு நிலமைகள் தொடர்பில் ஒவ்வொரு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் பேசுகின்றோம்.

வனவளத் திணைக்களத்தின் எல்லை மீறிய அபகரிப்புக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் விவரம் ஒன்றை இதில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் 2,22006 ஏக்கர் நிலமே வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்தது. இந்த நிலையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு 4,35000 ஏக்கர் நிலம் தற்போது வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

இவ்வாறாக மிகப்பாரிய அபகரிப்புக்களைத் தமிழர் தாயகப் பகுதி எங்கும் வனவளத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் எமது மூதாதையர்களுடைய பூர்வீகக் காணிகளாகும்.

வன வளத் திணைக்களம் பிரதேச செயலருக்கோ, கிராம அலுவலருக்கோ, கிராம மக்களுக்கோ எவ்வித அறிவிப்புக்களையும் செய்யாது தான்தோன்றித்தனமாக எல்லைக் கற்களையிட்டு இவ்வாறு மக்களுடைய பூர்வீக காணிகளை ஆக்கிரமிப்புச் செய்கின்றது.

எமது தமிழ் மக்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடப்பெயர்வைச் சந்தித்திருந்தனர்.

குறிப்பாக கடந்த 1983ஆம் ஆண்டு காலப் பகுதியில் கூட பல தமிழ் கிராமங்கள் இடப்பெயர்வைச் சந்தித்தன. இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த மக்கள், 2010 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடே தமது இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். தற்போதும் மீள்குடியமர்வு செய்யப்படாத கிராமங்களும் இருக்கின்றன.

இவ்வாறு மக்கள் நீண்டகால இடப்பெயர்வைச் சந்தித்ததால், மக்கள் பயன்படுத்திய, மக்கள் குடியிருந்த காணிகள் தற்போது பற்றைக் காடுகளாக காட்சியளிக்கின்றன.

இவ்வாறு பற்றைக்காடுகளாக காணப்படுகின்ற எமது மக்களின் பூர்வீகக் காணிகளை வன வளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்கின்றது.

நாட்டில் காடுகள் உருவாக்கப்பட வேண்டும்தான். அதற்காக வன்னியிலிருக்கும் எமது மக்களின் பூர்வீகக் காணிகளை அபகரித்து நாட்டுக்கான ஒட்டுமொத்த காட்டையும் உருவாக்க முயற்சிக்கக் கூடாது.

எமது மக்களின் பூர்வீக விவசாய வாழ்வாதாரக் காணிகளும் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு வன வளத் திணைக்களம் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது.

இதுமாத்திரமின்றிப் படையினர், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என அனைத்து அரச கட்டமைப்புக்களாலும் இவ்வாறு எமது மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. இந்த அரச கட்டமைப்புக்கள் எமது நிலங்களை ஆக்கிரமிக்கும் வேலைகளை மாத்திரமே கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

தென்பகுதிகளில் இவ்வாறான நிலமைகள் இல்லை. வடக்கு, கிழக்கிலேயே இவ்வாறு மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு எமது மக்கள் நிர்க்கதியாக்கப்படுகின்றனர்.

வன்னி என்பது கடந்த காலங்களில் விவசாயத்தில் சிறந்து விளங்கிய பகுதியாகக் காணப்பட்டது.

ஆனால், தற்போது மக்களின் விவசாயக் காணிகள் அனைத்தும் வனவளத் திணைக்களத்தாலும், ஏனைய அரச திணைக்களங்களாலும் பறிக்கப்பட்ட நிலையில், மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு தமிழ் மக்களுடைய காணிகள் அந்த மக்களுக்கே கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.- என்றார்.

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்தில் 6 பேர் பலி!

விருதுநகர் அருகே பொம்மையாபுரம் கிராமத்தில் சாய்நாத் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆலையை விதிமீறி குத்தகைக்கு விட்டமை, அனுபவம் இல்லாத தொழிலாளர்களை ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தியமை உள்ளிட்ட காரண ங்களால் விபத்து நடந்தமை முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சிவகாசி அருகே ஆலமரத்துபட்டி பகுதியை சேர்ந்தவர் பாலாஜி. இவர் விருதுநகர் அருகே வச்சகாரப்பட்டி பொலிஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பொம்மையாபுரம் கிராமத்தில் சாய்நாத் ஃபயர் ஒர்க்ஸ் என்ற பெயரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் உள்ள 84 அறைகளில் 150 இற்கும் மேற்பட்ட தொழி லாளர்கள் பேன்சி ரக பட்டாசுகள் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று காலை 84 தொழிலாளர்கள் பணிக்கு வந்தி ருந்தனர். பட்டாசு உற்பத்திக்கான ரசாயன பொருள்களை கலவை செய்யும் போது, காலை 9.40 மணி அளவில் உராய்வு காரணமாக திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் மருந்து கலவை செய்யும் கோட்டை சுவர் அறை, வேதிப்பொருள் அறை உட்பட 4 அறைகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமாகின. தகவலறிந்து வந்த விருதுநகர், சிவகாசி, சாத்தூர் தீயணைப்பு துறை யினர் தீயை அணைத்து, ஜே.சி.பி. இயந்திரம் மூலம்



இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்த விபதில் குருந்தமடத்தை சேர்ந்த வேல்முருகன் (வயது 54), காமராஜ், செட்டிக்குறிச்சியை சேர்ந்த நாகராஜ் (வயது 37), வீரார்பட்டியை சேர்ந்த கண்ணன், அருப்புக் கோட்டையை சேர்ந்த மீனாட்சிசுந்தரம் (வயது 46), சிவக்குமார் (வயது 56) ஆகிய 6 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் ஆவுடையாபுரத்தைச் சேர்ந்த முகமது சுதின் என்பவர் காயமடைந்தார்.

இந்த விபத்து குறித்து வழக்கு பதிவு செய்த வச்ச காரப்பட்டி பொலிஸார், போர்மேன்கள் பாண்டியராஜ் (வயது 23) பிரகாஷ் (வயது 27) ஆகியோரை தேடி வரு கின்றனர். அவர்களை கைது செய்து விசாரித்தால் விபத் துக்கான காரணம் தெரியவரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# 2 ஆவது நாளாக தொடரும் பனி மூட்டம்: டில்லியில் விமான போக்குவரத்து பாதிப்பு

வட இந்தியாவின் சில பகுதிகளில் இரண்டாவது நாளாக இன்றும் அடர்ந்த பனி மூட்டம் நிலவியது. இதனால் டில்லியில் விமான சேவை கள் பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து டில்லி சர்வதேச விமான நிறுவனம் அதிகாலை 12.05 மணிக்கு வெளியிட்ட எக்ஸ் பதிவில், "அடர் பனி மூட்டம் காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள் ளது. விமான சேவைகளின் புதுப்பிக் கப்பட்ட அட்டவணைகளை பயணிகள் தெரிந்து கொள்ள சம்மந்தப்பட்ட விமான நிறுனங்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள். அசவுகரியம் ஏற்பட்டிருந் தால் வருத்தம் தெரிவித்துக் கொள்கி றோம்" என்று தெரிவித்துள்ளது.

மோசமான வானிலை காரணமாக விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை பாதிக்கப்பட்டுள்ளதாக இண் டிகோ விமான நிறுவனம் அறிவித் துள்ளது. அதிகாலை 105 மணிக்கு அதன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எதிரில் இருப்பவர்கள் தெரி யாத அளவுக்கு விமான நிலையத்தில் அடர் பனி மூட்டம் சூழ்ந்திருப்பதால் விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விமான இயக்கம் மீண்டும் தொடங் கும் போது விமான போக்குவரத்து நெரிசல் காரணமாக இன்னும் தாம தம் ஏற்படலாம்." என்று தெரிவித் துள்ளது.

ஏர் இந்தியா நிறுவனம் அதிகாலை 1.16 மணிக்கு புதுப்பித்து வெளியிட்ட தகவலின்படி, டில்லி மற்றும் வட இந்திய பகுதிகளில் அடர்ந்த பனி மூட்டம் காரணமாக எதிரில் இருப் பவர்கள் தெரியாத நிலை நீடிப்பதால் விமான சேவைகள் பாதிக்கப்பட் டுள்ளது." என்று தெரிவித்துள் ளது.

டில்லியில் இன்று சனிக்கிழமை மிகவும் அடர்ந்த பனிமூட்டம் காணப் படும் என்று கூறி இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள் ளது. டில்லியில் இன்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு வெப்பநிலை 10.2 டிகிரி செல்சியசாக பதிவாகியுள் ளது. வெள்ளிக்கிழமை இது 9.6 டிகிரி செல்சியசாக இருந்தது.

அதேபோல் பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பிஹார், மேற்குவங்கம் மத்தியப் பிரதேசம் மாநிலங்களிலும் அடர்ந்த பனிமூட்டம் நிலவுகிறது.



# புதிய வைரஸ் பரவல் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை

## சீனா அறிவிப்பு

சீனாவில் தற்போது பரவி வரும் வைரஸ் தொற்று தொடர்பில் தேவையற்ற அச்சங்களை ஏற்படுத்தி கொள்ள வேண்டாம் என அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தற்போது அங்கு நிலவும் குளிர் காலநிலையுடன் இவ்வாறான வைரஸ் தொற்று பரவுவது இயல்பானது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், பல நாடுகள் சீனாவுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு தங்கள் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளன

சீன குடிமக்கள் மற்றும் சீனாவுக்கு வரும் வெளிநாட்டவர்களின் ஆரோக்கியத்தில் சீன அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்

சீனாவிற்கு பயணம் செய்வது பாதுகாப்பானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# சீனாவின் ஹோட்டன் பகுதியில் இரண்டு புதிய நிர்வாக அலகுகள்

## இந்தியா கடும் எதிர்ப்பு

சீனாவின் ஹோட்டன் பகுதியில் புதிதாக 2 நிர்வாக அலகுகளை உருவாக்கும் அறிவிப்புக்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த நிர்வாக அலகுகளில் சில இடங்கள் இந்திய - லடாக்கின் அதிகார வரம்புக்குட்டவை என இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் ஹோட்டன் பகுதியில் புதிதாக 2 நிர்வாக அலகுகளை உருவாக்கும் அறிவிப்பை அண்மையில் சீனா வெளியிட்டது.

இதற்குச் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு ஒப்புதல் அளித்தது.

இது தொடர்பில் டில்லியில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால், சீனாவின் சட்டவிரோத ஆக்கிரமிப்பை இந்தியா ஏற்கப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சீனாவின் சட்டவிரோத ஆக்கிரமிப்புக்கு சட்டபூர்வ அந்தஸ்தும் வழங்கப்பட மாட்டாது.

2 புதிய நிர்வாக அலகுகளை உருவாக்கும் அறிவிப்புக்கு ராஜதந்திர ரீதியாக சீனாவிடம் இந்தியா கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

அதேநேரம், இந்திய எல்லையையொட்டி, தமது ஆக்கிரமிப்பில் உள்ள திபெத்தில் பிரம்ம புத்திரா நதியின் குறுக்கே ஒரு டிரில்லியன் யுவான் செலவில், உலகின் மிகப் பெரிய அணையைக் கட்ட சீனா முடிவு செய்துள்ளது. எனினும் பிரம்ம புத்திரா நதிநீரைப் பயன்படுத்தும் உரிமை இந்தியாவுக்கும் உள்ளது.

இதனால் சீனாவில் பாயும் அந்த நதியில் மிகப் பெரிய திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறித்தும் ராஜதந்திர ரீதியில் தங்களது கருத்துக்களையும் கவலைகளையும் சீனாவுக்கு வெளிப்படுத்தியுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 04/01/2025


## கைதி ஒருவர் தப்பி ஓட்டம்

கனடாவில் சஸ்கட்ச்வான் பகுதியில் கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

பிரின்ஸ் அல்பர்ட் பகுதியில் அமைந்துள்ள சிறைச்

02



# ட்ரூடோவை பதவி விலகுமாறு வலுப்பெற்று வரும் கோரிக்கை

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக கோரிக்கை வலுத்து வருகிறது. எதிர்க்கட்சிகள், மக்கள் மட்டுமின்றி, அவர் சார்ந்த கட்சிக்குள்ளும் அவருக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது.**

**ஆனால், அடுத்த தேர்தலுக்குள் கட்சியை தான்தான் வழிநடத்துவேன் என அடம்பிடிக்கிறார் ட்ரூடோ.**

**ஆகவே, ட்ரூடோ கட்சித் தலைமையில் நீடிப்பாரா அல்லது பதவி விலகுவாரா என்பதை அறிவதற்காக, அவருக்கு எப்படி அழுத்தம் கொடுப்பது என்பது குறித்து விவாதிக்க, ட்ரூடோ சார்ந்த லிபரல் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று சந்திக்கவுள்ளனர்.**

ட்ரூடோவை பதவியிலிருந்து அகற்றிவிட்டு அவருக்கு பதிலாக வேறு யாரையாவது தலைமைப் பதவியில் அமர்த்துவதற்கான விதிமுறைகள் என்னென்ன என்பது குறித்தும் அவர்கள் விவாதிக்க இருக்கிறார்கள். இந்த விடயத்தை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தாங்கள் அந்த விடயம் குறித்து பேசும் அதிகாரம் தங்களுக்கு இல்லாததால், தங்கள் பெயரை வெளியிடவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

# கரையோரப் பிராந்தியங்களில் எரிபொருள் விலையில் மாற்றம்

கனடாவின் கரையோரப் பிராந்தியங்களில் பெற்றோல் மற்றும் டீசல் ஆகிய எரிபொருள்களின் விலைகளில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டுக்கான முதலாவது விலை மாற்றத்தில் இவ்வாறு விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

நோவா ஸ்கோஷியாவில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 5.6 சதத்தினால் உயர்வடைந்துள்ளது. டீசலின் விலையும் லீற்றர் ஒன்றுக்கு



5.1 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரின்ஸ் ஒப் எட்வர்ட் தீவுகளில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 1.1 சதத்தினால் உயர்வடைந்து 164.3 சதத்திற்கு விற்பனை செய்யப்படுகின்றது. டீசலின் விலையும் 2.9 சதத்தினால் உயர்வடைந்துள்ளது.

நியூபிரவுன்ஸ்விக்கில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 1.3 சதத்தினாலும் ஒரு லீற்றர் டீசலின் விலை 2.4 சதத்தினாலும் உயர்வடைந்துள்ளது.



# றொரன்ரோ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை

துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு நபர் ஒருவர் நடந்து சென்ற சம்பவம் குறித்து றொறன்ரோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

யுப்டில் ப்ரெசென்ட் மற்றும் ஜோட் போர் அவன்யூ ஆகிய பகுதிகளில் பகுதிகளுக்கு அருகாமையில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் குறித்த நபர் படுகாயம் அடைந்து இருந்தார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

என்ன காரணத்தினால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது? யாரால் நடத்தப்பட்டது? போன்ற விபரங்கள் எதனையும் பொலிஸார் வெளியிடவில்லை.

இந்த சம்பவத்தை தொடர்ந்து குறித்த பாதையை மூடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




## கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

29 வயதான கிளென் பேட்டரிக் ரிச்சர்ட் ஆல்கட் என்ற நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. 5 அடி 8 அங்குல உயரத்தைக் கொண்ட 168 பவுண்ட் எடையை கொண்ட நபர் ஒருவரை இவ்வாறு காணாமல் போய் உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

தப்பி சென்றவரை கைது செய்வதற்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர் இரண்டு ஆண்டுகள் மற்றும் ஒன்பது மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்து வருகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

வீடுடைப்பு வாகன கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்ற செயல்களின் அடிப்படையில் இவருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்திருந்தது.








# வீடு கொள்வனவு செய்வோருக்கு பல்வேறு சலுகைகள் அறிவிப்பு

மலர்ந்துள்ள இந்த 2025 ஆம் ஆண்டில் கனடாவில் வீடு கொள்வனவு செய்வது தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே கனடாவில் வீடு ஒன்றை கொள்வனவு செய்வது தொடர்பில் சவால் மிக்கதாகவே காணப்படுகின்றது.

அடகு கடன் தொடர்பான சட்ட விதிகளில் மாற்றம் மற்றும் கடன் வட்டி விகிதங்களில் மாற்றம் போன்ற ஏதுக்களினால் வீடு கொள்வனவு செய்வதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறு எனினும் வீட்டுச் சந்தை பொதுவாக போட்டித் தன்மையுடையது என்பதனால் விலை உயர்வடையும் சாத்தியங்களை மறுப்பதற்கில்லை என தெரிவிக்கப்படுகிறது.

முதல் தடவையாக வீடு கொள்வனவு செய்வோர் இந்த ஆண்டில் கொள்வனவு முயற்சிகளில் ஈடுபடலாம் என தெரிவிக்கப்படுகிறது.

முதல் தடவையாக வீடு கொள்வனவு செய்பவருக்கு பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அடகு கடன் தொகையை 30 ஆண்டுகளில் செலுத்தி முடிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இந்த கால அவகாசம் 25 ஆண்டுகளாக காணப்பட்டது.

இவ்வாறு அடகு கடன் மாதாந்த கொடுப்பனவு போன்ற விடயங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# சட்டவிரோதமான முறையில் ஊசி மருந்தை பயன்படுத்திய தாதி பணி இடைநிறுத்தம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் தாதி ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் லோவர் மெயின்லண்ட் பகுதியைச் சேர்ந்த தாதி ஒருவரையே இவ்வாறு பணியிடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி தாதி சட்டவிரோதமான முறையில் புடொக்ஸ் என்ற ஊசி மருந்தை பயன்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

உரிய மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றாது நோயாளிகளுக்கு குறித்த ஊசி மருந்தை பயன்படுத்தி உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச்செயலில் ஈடுபட்ட தாதிக்கு ஐந்து மாத கால பணி இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 30 ஆயிரம் டொலர்கள் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய மருத்துவ பரிந்துரைக்கு புறம்பான வகையில் புடொக்ஸ் என்ற ஊசி மருந்தை பயன்படுத்துவது கனடாவில் தடை செய்யப்பட்டுள்ளது.

உடலின் தோள்களில் ஏற்படும் சுருக்கங்களை நீக்குவதற்காக அழகுக்கலை நிபுணர்கள் இந்த தடுப்பூசியை பயன்படுத்துவார்கள் என்பதை குறிப்பிடத்தக்கது.

எனினும், மேற்படி தாதி எவ்வித மருத்துவ பரிந்துரைக்கும் கட்டுப்படாது இந்த ஊசி மருந்தை பயன்படுத்தி உள்ளார்.

எனினும், இந்த ஊசி மருந்தை ஏற்றிக்கொண்ட எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர் ஒருவரின் நேரடி கண்காணிப்பில் மட்டுமே இந்த ஊசி மருந்தை பயன்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ விதிமுறைகளுக்கு மீறி செயல்பட்ட காரணத்தினால் குறித்த தாதிக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.